RAMULU'S POPULAR PENNY SERIES—53 [ஆசிரியர்: நாரண துரைக்கண்ணன்

# ஜகப்பிரசித்தி பெற்ற வீரன்

# நெப்போலியன் போனபார்ட்டி



*All Rights Strictly Reserved*] [பிரசுரம்: எம். எஸ். ராமுலு கம்பெனி

## நேரு ஹிந்தி முதல் பாடம், இரண்டாம் பாடம்

தமிழ் மூலமாய் ஹிந்தி உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், கூட்டு எழுத்துக்கள், சிறு வார்த்தைகள், எண்கள் முதலியவை சுலபமாய்க் கற்றுக் கொள்ளலாம். 64-பக்கங்கள் கொண்டது; விலே அணு 2. ஒரு காபி அனுப்ப மூன்று அணு இந்தியா தபால் ஸ்டாம்பு அனுப்பிவைக்கக் கோருகின்றோம். [நேரு ஹிந்தி ஆசான் வாங்குபவர்கள் ஷ புத்தகத்தை வாங்க வேண்டியதில்லை.]

**Nehru Hindi—Telugu 1 & 2 Reader. Price Two Annas**

---

# நேரு ஹிந்தி ஆசான்

அல்லது

## ஹிந்துஸ்தானி ஸ்வபோதினி

[துரைத்தனத்தார் அங்கீகரித்தது]

தமிழ் படிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் சிறுவர் முதல் பெரியோர் ஈருக தங்கள் ஓய்வுக் காலங்களில் தினந்தோறும் அரைமணி நேரம் இப்புத்தகத்தை அப்பசித்து வந்தார்களானால், உபாத்தியாயர் உதவி யின்றித் தமிழைக் கொண்டு நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷை யைச் சப்ததோஷ மில்லாமல் சுலபமாய்ப் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக் கூடிய அரிய பெரிய புத்தகம். இப்புத்தகம் ஒன்று கையிலிருந்து விட்டால், பாஷைக் கஷ்டம் என்பது சிறிதுமின்றி உலகத்தையே சுற்றிவந்து விடலாம். ஹிந்திப் படங்களையே பெரிதும் விரும்பும் சினிமா நேயர்களுக்கு இது மிகவும் இன்றியமையாத புத்தகமாகும். வியாபாரிகளுக்கு இப்புத்த கம் ஒரு தோன்றாத் துணைவனுகும். இப்புத்தகம் 22-பெரிய அத்தி யாயங்களாய் வகுக்கப்பட்டிருக்கின்றன. தமிழர் யாவரும் இப் புத்தகத்தை வாங்கி வாசித்து பெருமையும் பயனும் அடைய வேண்டி இதற்கு மிகக் குறைவாக விலே வைத்திருக்கின்றோம்.

**விலே அணு 0—12—0**

அணு 0—14—0-க்கு மணியார்டர் அல்லது இந்தியா தபால் ஸ்டாம்பு அனுப்பினுல் ஒரு காபி அனுப்பி வைக்கப்படும். வி. பி. யில் அனுப்புவதானுல் தபாற் செலவு 0—7—0 அணு அதிகமாகும்.

**எம். எஸ். ராமுலு கம்பெனி**

286, அப்பா பில்டிங்ஸ் : : எஸ்பிளனேட், மதராஸ்

கமலா வாசக நிலையம்
து. ரெங்கநாதபுரம்
வரிசை நெ. 637/036
பகுதி நெ.

### ஜகப்பிரசித்தி பெற்ற வீரன்

# நெப்போலியன் போனபார்ட்டி

## 1. புரட்சியில் பிறந்த புருஷோத்தமன்

"குத்து! கொல்லு! வெட்டு! வீழ்த்து!" என்று ஒரு புறம் ஆரவாரங் கிளம்பும். "பிடி! விடாதே! துரத்தி யோடு! சுட்டுத் தள்ளு, நாய்களை!" என்று மற்றொருபுறம் அதிகாரத்தொனி முழங்கும். அடுத்த கணம் கூச்சல் ஏற்பட்ட இடத்திலிருந்து ஒரே அமளி குமளியாயிருக்கும். ஜனங்களோடு ஜனங்கள் மோதுவர். தடிகளோடு துப்பாக்கிகள் உராயும். அடுத்த விநாடி பல தலைகள் தரையில் உருளும். "ஐயோ! அப்பா" என்ற கூக்குரலோடு பலத்த அடிபட்டுக் குற்றுயிராய் பலர் வீழ்வர். சிறிதுநேரத்திற்கெல்லாம் இரத்த ஆறு புரண்டு ஓடும். ஒரு திசையிலிருந்து பரட்டைத் தலையும் குழிந்த கண்களும், ஒட்டிய தாடையும் வற்றிய தேகமுமுடைய பட்டினிப் பட்டாளங்கள் (ஆண்களும் பெண்களும்) தாறுமாறாய்க் கூச்சலிட்டுக்கொண்டு ஆவேசமாய் வந்து கொண்டிருக்கும். வேறு திசையிலிருந்து ஜிகினா வேலைப்பாடமைந்த வெல்வெட்டு சொக்காய், சரிகை குல்லாய் முதலிய ஆடம்பர ஆடைகள் அணிந்த பூதாகாரமான தேகமும் பெருத்த தொந்தியுமுடைய பிரபுக்களும், பணக்காரர்களும் இராணுவப் படை காவலாக வர பவனி வந்துகொண்டிருப்பர். இரு கூட்டமும் நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தால் ஒரே களேபரந்

தான். பிரபுக்களுக்கும் செல்வந்தர்களுக்கும் ஏழை மக்களைக் கண்டால் சர்வ அலட்சியம். நாய்களை விரட்டுவது போல், அவர்களைத் துரத்தியடிக்கும்படி சோல்ஜர்களை ஏவுவர். வெறிகொண்ட சோல்ஜர் பட்டாளங்கள் பட்டினிப் பட்டாளங்களை விரட்டி விரட்டியடிக்கும். சில சமயங்களில் சிப்பாய்கள் ஏழை மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்து, மிருகங்களைச் சுட்டு வீழ்த்துவதுபோல் வீழ்த்துவர் மற்றுஞ் சில சமயங்களில் ஆட்டுமந்தைகளை மடக்கிப் பட்டியில் அடைப்பதுபோல், கூட்டங் கூட்டமாகப் பிடித்துச் சிறையில் அடைப்பர். இவ்வளவும் அரசன் பெயரால், சட்டத்தின் பெயரால் நடக்கும்.

ஏழை மக்களுக்கு, பிரபுத்துவ ஆணவங்கொண்ட பிரபுக்களையும் பணத்திமிர் பிடித்த செல்வந்தர்களையும் கண்டால் விவரிக்க முடியாத வெறுப்பு; ஆத்திரம். எனவே, அவர்கள் கண்களில் பிரபுக்களும், செல்வர்களும் வசமாக அகப்பட்டுக் கொண்டால், தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளச் சிறிதுந் தயங்குவதில்லை. இவ்விதம் எங்கும் எப்போதும் கலகமும் போருமாகவே இருந்தது.

பதினெட்டாம் நூற்றுண்டில் பிரான்ஸ் தேசத்தின் நிலைமை இதுதான். இவ்விதக் குழப்பமான நிலைக்கு உரிய காரணமென்ன? சொல்ல வேண்டுமா? தேசத்தை ஆளும் அரசாங்கத்தின் ஒழுங்கீனமும், யதேச்சாதிகாரமும், பரம்பரையாக சர்க்காரின் செல்லப்பிள்ளைகளாக இருந்து கஷ்டமின்றிச் சுகபோகங்களை அனுபவித்து வரும் பிரபுக்கள் செல்வந்தர்களின் ஆணவமும் பணத்திமிருமே பிரஞ்சுதேசத்தின் அலங்கோலநிலைக்கு அடிப்படையான காரணமாகும். சர்க்காரும் பிரபுக்களும் தங்கள் சுகபோகங்களுக்கும் ஆடம்பரச் செலவுகளுக்கும் யாதொரு குறைவுமில்லாத வகையில் சட்டங்களையும், காரியங்களையும் செய்து வந்தனரே யொழிய, பிரஜைகளின் க்ஷேமத்தைக் கருதுவதே யில்லை. தேசமக்கள் சுகமாக வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து தரவேண்டியதற்குப் பதிலாக, எடுத்ததற்கெல்லாம் வரிபோட்டு அவர்களுக்குக் கஷ்டத்தை உண்டுபண்ணினர்.

எனவே, இப்பிரபுக் கூட்டத்தாருக்கு எதிராக ஏழை மக்கள் கிளர்ச்சி செய்துவந்ததில் ஆச்சரியமில்லை.

இக்கலகங்களின் முதிர்ச்சிதான் சரித்திரப் பிரசித்தி பெற்ற பிரஞ்சுப் புரட்சியாகும். இப்புரட்சி பிரான்ஸையே யல்லாது, பிற தேசங்களையும் அதிரச் செய்தது. யதேச்சாதி காரத் தன்மைவாய்ந்த கோனாட்சி அல்லது முடியாட்சியை யொழித்து, குடிமக்களின் நன்மையையே யடிப்படையாகக் கொண்ட குடியாட்சியை ஏற்படுத்த பெருமுயற்சி செய்யப் பட்டது. புரட்சியின்போது, அரச வம்சமும், பிரபு பரம் பரையும், பணக்காரர்களும் சின்னாபின்னமுற்று, சிதறி யோடினராயினும்; பிரஜைகளின் தலைவர்களென வந்தவர் களுக்கு அரசியல் ஞானமும் நிர்வாகத்திறமையும் இல்லாமை யாலும், ஒழுங்கும் கட்டுப்பாடும் கிஞ்சிற்றுங் கருதப்படாது, தண்டெடுத்தவனெல்லாம் தலைவன் என்ற நிலையில் காரியம் நடந்து வந்ததாலும் குடியாட்சி சரியாக நிலைக்கவில்லை. பிர ஜைகளின் பெயரால் ஏற்பட்டிருந்த ஒவ்வொரு கட்சியும் அதிகாரத்தைப் பெறப் போட்டி போட்டு வந்ததால், புரட்சிக் குப் பின் சமாதானமும் சந்துஷ்டியும் நிலவுவதற்குப் பதி லாக, அமைதியற்ற நிலைமையே நீடித்து வந்தது. இடை யிடையே, புரட்சியில் தலைதப்பிய பிரபுக்களின் விஷமம் தலை காட்டி வந்தது. இவ்வித அல்லல்க ளிடையே அகப்பட்டு பிரஞ்சு மக்கள் தத்தளித்து வந்தனர். ஆகவே, அவர்கள் தங்களுக்கு விமோசனத்தை அளிக்கவல்ல ஒரு தலைவன் வர மாட்டானா? என்று ஏங்கித் தவங் கிடந்தனர். அச்சமயத் தில் வீர நெப்போலியன் தோன்றினான். புரட்சிக்குப் பின் தோன்றிய அப் புருஷோத்தமனே பிரஞ்சு மக்களின் தாபத்தை யறிந்து சேவைசெய்து சுகத்தைத் தந்தான். கோன் ஆட்சியும், குடியாட்சியும் மக்களுக்குச் சரியானபடி நன்மை பயக்காததை யறிந்த அவன், குடிக்கோன் ஆட்சியை நிலை நாட்டினான். ஒருகாலத்தில் குடிகளின் நன்மையையே பெரி தாகக் கருதி ஆட்சி செலுத்திவந்த கோன் ஆட்சி அதிகார ஆணவத்தால் கொடுங்கோன்மையாக மாறியதை யறிந்து, இளமையி லிருந்தே அதை வெறுத்துவந்த நெப்போலியன்,

குடியாட்சி முறையையே ஆதரித்து வந்தான்; ஆயினும், அதுவும் சாதாரண ஜனங்களின் அறிவு, ஒழுங்கற்ற தன்மையால், கோன் ஆட்சியைப் போலவே, விபரீத விளைவையுண்டுபண்ணி வருவதைக் கண்ட அவன், குடி தழுவிய கோன் ஆட்சியை அதாவது குடிக்கோன் ஆட்சியை ஏற்படுத்தி ஜனங்களுக்கு நன்மை செய்யலானுன். குடிக்கோன் ஆட்சி எப்படி நடைபெற வேண்டுமென்பதற்கு, தானே ஆதர்ச புருஷனுயிருந்து நடத்திக் காட்டினுன். இவன் பிரஞ்சு தேசாதிபதியாயிருந்து ஆட்சி செலுத்திய காலத்தில் தான், பிரஞ்சு சாம்ராஜ்யம் பிரபல்யமடைந்தது. பிரஞ்சு மக்கள் பூரண சுகத்தை அநுபவித்தார்கள். அவன் காலத்தில் தான் பிரான்ஸில், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் உண்மையில் நிலவின. பிரஞ்சு மக்கள் வாழ்க்கையில் உண்மையான சுதந்திரத்தை அநுபவித்தனர்; சரிநிகர் சமானமாக வாழ்ந்தனர். தங்களுள் சகோதர நேயம் பூண்டு ஒழுகினர். இவ்விதச் சுபீட்ச நிலைமையை ஏற்படுத்த நெப்போலியன் எடுத்துக்கொண்ட சிரமம் கொஞ்சநஞ்சமன்று. பிரஞ்சு தேசமக்களின் நன்மைக்காக, நெப்போலியன் தன் வாழ்க்கையையே அர்ப்பணஞ் செய்தான் என்ருல் மிகையாகாது. அவன் பிரான்ஸில் குடிக்கோன் ஆட்சியை நிலை நாட்டியதன் பயனுக, உள்நாட்டில் பிரபுக்களின் தொல்லைகளுக்கும் வெளியே பிரபுத்துவ தேச அரசாங்கங்களின் அட்டூழியங்களுக்கும் அவன் ஆளாக வேண்டியிருந்தது. ஆயினும் அவன் கஷ்டங்களை யெல்லாம் பொருட்படுத்தாது, கடைசி வரை தன் கொள்கைக்காக—தன் உயரிய லட்சியத்தை நிலைநிறுத்துவதற்காக தன் நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதையே குறியாகக் கொண்டு காரியங்களைச் செய்து வந்தான். தன்னையும் தன் நாட்டையும் அழிக்கவந்த பகைவர்களின் தேசங்கள்மீது நெப்போலியன் படையெடுத்து, ஜெயக்கொடி நாட்டி ஜகப்பிரசித்திபெற்ற வரலாறு உலக சரித்திரத்தில் ஒளிபெற்று ஒளிர்கிறது. அவ்வீர புருஷனது சரித்திரம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் வீரத்தை யுண்டு பண்ணக் கூடியதாகும்.

நெப்போலியன் 1769-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதியன்று சார்லஸ் போனபார்ட்டிக்கும், லதீதா ரமோலினிக்கும் இரண்டாவது மைந்தனாய்ப் பிறந்தான். இவன் ஜூன் மாதத்துக்கு முன் ஜனித்திருந்தால் பிரஞ்சு தேசப் பிரஜையாயிருக்கமுடியாது. இத்தாலி நாட்டைச் சேர்ந்தவனாகவே கருதப்பட் டிருப்பான். ஏனென்றால், இவன் பிறந்த இடம் கார்ஸிகா தீவின் தலைநகரான அஜாகியோ என்பதாகும். இத் தீவு இத்தாலி தேசத்தின் ஆதிக்கத்தி லிருந்து வந்தது. இதைப் பிரஞ்சு தேசத்தினர் திடீரென படை யெடுத்து ஆக்ரமித்துக் கொண்டனர். ஆதலால், அத் தீவில் வசித்து வந்த மக்களெல்லாம் பிரஞ்சு தேசப் பிரஜைகளாயினர். எனவே, இத்தாலியப் பரம்பரையில் அதாவது இத்தாலிய இரத்தத்தில் ஊறிய பெற்றோர்களுக்குப் பிறந்த நெப்போலியன் அரசியல் சுழற்சிக்கு ஆளாகிப் பிரஞ்சுப் பிரஜையானது இயற்கையேயல்லவா! கார்ஸிகா தீவினர் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்க, பிரஞ்சுக்காரர்களோடு போர்புரியத் தொடங்கிய காலத்திலேயே, நெப்போலியன் தாயின் கருப்பையை வந்தடைந்தான். தாய்நாட்டு உரிமையை நிலைநாட்ட வேண்டி, சார்லஸ் போனபார்ட்டி, தாம் ஜீவனோபாயத்துக்காக நடத்தி வந்த வக்கீல் தொழிலையும் விட்டுவிட்டு, எதிரிகளைப் போராடி விரட்டியடிக்கப் புறப்பட்டுவிட்டார். ஆருயிர்க் கணவனை ஒரு கணமும் விட்டுப் பிரிய விரும்பாத லதீதா ரமோலினியும் கர்ப்பமாயிருக்கும் நிலையிலும், முதல் குழந்தையை எடுத்துக்கொண்டு சார்லஸுடன் செல்லலானாள். காடு, மேடு, பள்ளத்தாக்கு, மலை, நதி முதலியவைகளை யெல்லாங் கடந்து கணவனுடன் அச்சமும் அயர்ச்சியுமின்றி அவள் போர்க்களங்களில் திரிந்துவந்தாள். இவ்விதம் தந்தையும் தாயும், அஞ்சாமையும் வீராவேசமும் தன் மதிப்பும் உடையவர்களா யிருந்ததும், கர்ப்பகாலத்தில் பாசறை வாசமும் யுத்த அனுபவங்களும் பெற்றிருந்ததுமே நெப்போலியனைப் பிற்காலத்தில் உலகிலேயே இணையற்ற வீரனாகப் பிரகாசிக்கச் செய்த தென்னலாம். நெப்போலியன் உலகில் உதித்து, அருமையாக வளர்ந்து வருகையிலேயே, தாய் வாயி

லாக, கார்ஸிகா தீவு பிரஞ்சுப் படையெடுப்பு விஷயத்தையும் அதையொட்டிய போர் நிகழ்ச்சிகளையும் அறியலானான். அதன் பயனாக, அவன் தன் தந்தையைக் காட்டிலும், கார்ஸிகா தீவைக் காக்கப் படைதிரட்டிக் கடைசிவரை போர் புரிந்த ஜெனரல் பயோலி என்பவரிடமே மதிப்பு கொள்ளலானான். தன்னூர் மக்கள் பயோலியைப்பற்றிக் கூறும் கதைகளைக் கேட்பதில் அவனுக்கு அளவற்ற பிரியம். ஆனால், அவரை யாரேனும் இழிவாகப் பேசினால், அதைக் கேட்கச் சிறிதுஞ் சகிக்கமாட்டான்.

## 2. வீர இளைஞனின் விசித்திரப் போக்கு

நெப்போலியன் உடன் பிறந்தவர்கள் பன்னிரண்டு பேர். அவர்களில் ஐவர் இறந்துபோயினர். ஜோஸப்என்பவன்தான் நெப்போலியனுக்கு மூத்தவன். லூசியன், லூயி, ஜரோமி, எலிஜா, பாலன், கரோலைன் ஆகிய ஆறுபேரும் அவனுக்கு இளையவர்கள். தன் சகோதர சகோதரிகள்மீது அவனுக்கு அன்பு மிகுதியும் உண்டு. ஆனாலும் அவன் அவர்களுடன் கூடி எப்போதும் விளையாடிக் கொண்டிருக்க மாட்டான். அவன் பெரும்பாலும் ஏகாந்தமாகவே இருக்க விரும்புவான். அச் சமயங்களில் அவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பான். அவன் முகத்தில் சாதாரணமாகப் புன்சிரிப்பைக்கூட காணமுடியாது. கோபம் மட்டும் அடிக்கடி உண்டாகும். யாரையும் லட்சியம் பண்ணாத தன்மை அவனிடம் இயற்கையாய் அமைந்திருந்தது. எவ்வித இடுக்கண்களும் துன்பங்களும் நேர்ந்தாலும் தளராத நெஞ்சம் பூண்டிருந்தான். இவனிடம் மூத்தவனான ஜோஸப்புக்கும் அச்சமுண்டு. இவன் விளையாட விரும்பினால், வாள், துப்பாக்கி முதலிய ஆயுதங்களையே விளையாட்டுக் கருவிகளாக உபயோகித்து ஆடுவான்.

நெப்போலியன் தக்க பருவம் வந்ததும் கல்விபயில, பள்ளிக்கு அனுப்பப்பட்டான். அவன் கல்வி கற்பதில் கருத்தூன்றி ஒழுங்காகப் படித்துவந்தான்.

நெப்போலியன் உடை உடுத்தும் விஷயத்தில் மட்டும் சரியாகச் சிரத்தை செலுத்துவதே கிடையாது. சட்டை ஒருவிதமாயிருக்கும். மேல்கோட்டு மற்றொருவிதமாய்க் காணப்படும். காற்சட்டை 'தொள தொள' வென்று இருக்கும். பூட்ஸ் அலங்கோலமா யிருக்கும்.

இவ்விதம் எல்லாவகையிலும் நெப்போலியன் தனிச் சிறப்பு வாய்ந்திருந்ததால், தாயும் தந்தையும் அவன்மீது அளவிலா அன்புகொண்டிருந்தனர். ஆனால், நெப்போலியனின் துரதிர்ஷ்டம் அவன் தலையெடுப்பதற்கு முன்பே, சார்லஸ் போனபார்ட்டி மனைவி மக்களை வருந்தவிட்டு உயிர் நீத்தார். ஆகவே, லதீதா இளம்பருவத்தினளா யிருந்தும், போதிய பொருளில்லாமலிருந்தும் தன் குமாரர்களையும் குமாரத்திகளையும் முன்னையினும் கண்ணுங் கருத்துடனும் மிக அருமையாகவும் வளர்த்துவந்தாள். தன் மக்கள் நற்குண நற்செய்கைகளை யுடையவர்களாய் பிற்காலத்தில் வாழ்க்கையில் புகழும் பெருமையுடனும் வாழவேண்டுமென்பது அவளது ஆவல். இவ் விருப்பத்தை அவள் செய்கையில் நடத்திக் காட்டினாள். நெப்போலியனும், மற்ற பிள்ளைகளும் பிற்காலத்தில் சிறந்து விளங்கியதற்கு லதீதாவே மூலகாரணமாகும். இதை நெப்போலியன் அடிக்கடி கூறியிருக்கிறான்.

கார்ஸிகா தீவு பிரான்ஸின் வசமானதும், அதற்குக் கவர்னராக வந்தவர் கவுண்டு மார்பூப் என்பவராகும். லதீதா உயர்குடியில் வந்தவளாதலாலும், நல்ல பரம்பரையில் வந்த சார்லஸுக்கு வாழ்க்கைப் பட்டவளாதலாலும், கவர்னர் நடத்தும் தேநீர் விருந்துகளுக்கும் நடனங்களுக்கும் போவதுண்டு. இவளுடன் சில சமயங்களில் நெப்போலியனும் சென்று வருவான். ஏற்கனவே, லதீதாவின் அழகிய களங்கமற்ற வதனத்தைக் கண்டு நன் மதிப்பும் அன்பும் கொண்டிருந்த கவர்னர், நெப்போலியனின் கம்பீரத் தோற்றத்தையும் வீர உணர்ச்சியையும் கவனித்து அன்புபூண்டு அளவளாவி வரலானார்.

நெப்போலியன் பத்தாவது வயதில் பிரையன் என்னுமிடத்திலிருந்த இராணுவக் கல்லூரி யொன்றில் சேர்க்கப்

பட்டான். இவ்விதம் அவன் யுத்தப்பயிற்சியை மேற்கொண்டதற்கு, கார்ஸிகா தீவின் கவர்னரது தூண்டுதலும் உதவியுமே காரணமாகும். நெப்போலியனது இயற்கையில் அவன் வீரனுவதற்குரிய அறிகுறிகள் காணப்பட்டமையாலேயே, கவர்னர் அவனை இராணுவக் கல்லூரியில் சேர்க்கும்படி யோசனைகூறி வற்புறுத்தினர். லதீதா தன் அருமை மகனைப் பிரிந்திருக்க விரும்பவில்லை யானலும், அவனது எதிர்கால நன்மையை யுத்தேசித்து, இவ் வேற்பாட்டிற்கு இணங்கினள். தாயிடம் பேரன்புடைய நெப்போலியனுக்கு அவளைப் பிரிந்து செல்வதென்பது பெருங் கஷ்டமாகவே இருந்தது. அவன் கண்ணீரைச் சோர விட்டுக்கொண்டே விடைபெற்றான். கடைசியாக, நெப்போலியன் பிரஞ்சு தேசத் தலைநகரான பாரிஸ் நகரையடைந்து, பிரையன் இராணுவக் கல்லூரியில் சேர்ந்து வாசிக்கலானன்.

இக் கலாசாலையில் பிரபு வம்சத்துப் புத்திரர்களும், செல்வந்தர்களின் செல்வர்களும் இராணுவ உத்தியோகஸ்தர்களது புதல்வர்களுமே இராணுவக் கல்வி கற்று வந்தனர். அவர்களது ஆடம்பரச் செலவும் அட்டகாசப் போக்கும் சொல்லி முடியாது. அவர்களுடைய அகம்பாவங் கொண்ட கண்களுக்கு, நெப்போலியனது எளிய தோற்றம் வெகு அலட்சியத்தையும், அருவருப்பையும் உண்டு பண்ணின. அத்துடன், அவன் பிரஞ்சு மொழி பேசத் தெரியாதவனகவும், இத்தாலி மொழி பேசுபவனகவும் இருந்தது, அவர்களை இன்னுங் கேவலமாகக் கருதச் செய்தது. அப் பணக்கார மாணவர்கள் நெப்போலியனை ஒரு அன்னியனென்றும், ஏழை யென்றும் கருதிப் புறக்கணிக்க லாயினர். நெப்போலியனுக்கு இச் சிறுவர்களது அகம்பாவ மனேபாவம் ஆத்திரத்தைத் தந்தது. தன்னைப் போலவே தானே தன் தந்தையும் பிற கார்ஸிகா தீவினரும் பிரஞ்சு மக்களிடம் பேதுற்றிருப்பர் என்று எண்ணி ஏங்கினன். ஏற்கனவே, தன் நாட்டுச் சுதந்திரத்தைப் பறித்தவர்களென்ற காரணத்துக்காக, பிரஞ்சுக்காரர்களிடம் துவேஷங் கொண்டிருந்த நெப்போலியன், இச் சிறுவர்களது

விபரீதப் போக்கைக் கண்டு இன்னும் மிகுந்த துவேஷங் கொள்ளலானுன். மற்ற பிள்ளைகள் இவனைக் கேவலமாகக் கருதி ஒதுக்கி விட்டது ஒரு விதத்தில் இவனுக்கு நல்லதே யாயிற்று. அவர்களெல்லாம் வெறும் விளையாட்டிலும் தமாஷா முதலியவைகளிலும் பெரிதும் பொழுதைப் போக்கி அரட்டை யடித்துக்கொண் டிருக்க, இவன் புத்தகங்களையே தனக்குரிய அருமைத் தோழர்களாகக்கொண்டு சதா படித்துக்கொண் டிருந்தான். பூகோளப் படங்களை உன்னிப்பாகக் கவனிப்பான். இவ்விதம் இவன் கல்வியில் ஊக்கங் காட்டி வந்ததால், கணிதம், சரித்திரம், அரசியல், அர்த்த சாஸ்திரம் முதலிய பாடங்களில் சிறந்து விளங்கி முதல்தரமான மாணவனுய்த் திகழ்ந்தான். ஹோமர், ஒஸியஸ் முதலிய கவிஞர்களின் கவிதைகளை ஆர்வத்துடன் படிப்பான். ஒய்வு காலத்தில் அவன் புத்தகசாலைக்குப் போய், பல தேசத்து வீரர்களது வரலாறுகளையும், ரோம், கிரீஸ் முதலிய நாகரிக தேசங்களின் சரித்திரங்களையும் படித்து வந்தான். இவ்வித நற்பண்புகள் ஆசிரியர்களை இவன்மீது அன்புகொள்ளச் செய்தன. ஆரம்பத்தில் இவனை அலட்சியப் படுத்திய மாணவர்களும் இவனது அறிவாற்றல் களைக் கண்டு மதிக்கலாயினர். அவர்கள் மெள்ள இவனிடம் நேசஞ் செய்துகொள்ள விரும்பினர். ஆனல், நெப்போலியன், அவர்களுடன் சேராமலே தனித்திருந்து வந்தான். இது அவர்களுக்கு இவன்மீது ஆத்திரத்தையும், அருவருப்பையும் உண்டாக்கியது.

கலாசாலையில் மாணவர்கள் உழுது பயிர் செய்வதற்கென, நிலத்தை அளந்து கொடுப்பது வழக்கம். நெப்போலியன் தனக்குக் கொடுக்கப் பட்ட நிலத்தை நன்கு பண்படுத்திப் பயிர் செய்து, ஒரு சிறு தோட்டத்தைச் சிருஷ்டித்தான். அதில் மற்றவர்கள் நுழையாதிருக்க முள் வேலியிட்டான். சுற்றிலும் பெரிய மரங்களை வைத்தான். இத் தோட்டத்தின் நடுவே ஒரு சிறு கோட்டையைக் கட்டி அதில் பொழுது போக்கி வந்தான். மற்ற மாணவர்களில்

பலர் தங்களுக்குக் கொடுக்கப் பட்ட நிலங்களைக் கரம்பா கவே வைத்திருந்தனர்.

மற்றவர்கள் வெளியில் தலை காட்ட அஞ்சும் பனி, மழைக் காலங்களில் கூட, நெப்போலியன், வெளியே உலாவி, கலாசாலையைச் சுற்றியும் உறைந்துள்ள பனிக்கட்டி களைக் கொண்டு, கோட்டைகளும், மதில்களும், பாசறை களும், அகழிகளும் கட்டுவான். அவைகளில் விளையாடத் தன் சகா மாணவர்களை அழைப்பான். இவ்விதம் இவன் கட்டிய கோட்டை முதலியவைகள் வெகு அழகாக அமைக் கப்பட் டிருந்தமையால், அவ்வூர் மக்கள் திரள் திரளாக வந்து அவைகளைக் கண்டு களித்து, நெப்போலியனது திறமை யைப் பாராட்டிச் செல்வர்.

நெப்போலியன் மாணவர்களிடையே கலகமோ சண்டையோ நேர்ந்தால் அதில் தலையிட்டுச் சமரசஞ் செய்து வைப்பான். இளம் பிள்ளைகளை, பெரிய பையன் கள் துன்புறுத்தினால், நெப்போலியன் அவ்விதஞ் செய் வது கொடுமை என்பதை எடுத்துக் காட்டிப் புத்தி கூறு வான். இவ்விதமாக, நெப்போலியன் இக் கல்லூரியில் ஒரு குறிப்பிடத் தக்க மாணவனாய் இருந்து ஐந்தாண்டுகள் படித்தான். இவன் எல்லா பாடங்களிலும் முதல் மாணவனா யிருந்தாலும், கையெழுத்து மட்டும் நன்றாய் அமையவில்லை. பிரம்மன் லிபிபோல், பிறர் எளிதில் படித் தறிய முடியாதபடி கோணலாய், சர்வ விகாரமாயிருக்கும்.

விடுமுறை காலங்களில் நெப்போலியன் தன் அருமை யன்னையைக் காணத் தவறமாட்டான். நெப்போலியன் ஜெனரல் பயோலியிடம் வைத்திருக்கும் மதிப்பை அவர் அறிவாரோ இல்லையோ! ஆனால் அவர் ஒருமுறை நெப்போ லியனைக் கண்டு, வியப்பும் மகிழ்ச்சியுமுற்று, "இதுவரை உலகம் பெற்றிராத மகாவீரன் இவன்; இவனால் கார்ஸிகா தீவுக்குப் பெரும்புகழ் ஏற்படும்" என்று மனமாறக் கூறினர்.

நெப்போலியன் கல்வியிலும் பிறவற்றிலும் பெருமை பெற்றுவருவதை யறிந்த ஆஸ்திரியா சக்கரவர்த்தி தம் செல் வக் குமரியை அவனுக்கு மணமுடிக்க விரும்பினர். ஆனால்

நெப்போலியன் இச் செய்தியையே அறவே வெறுத்தான். தன் வம்ச பரம்பரையைத் தெரிந்துகொள்ள வந்த சக்கர வர்த்தியின் தூதர்களிடம், 'இத்தாலியைக் கொடுங்கோ லாட்சி செலுத்தும் ஒருவனுடைய மரபைச் சேர்ந்தவன் என்பதைவிட, உண்மையும் ஒழுக்கமும் உள்ள ஒரு எளிய வன் குமாரன் என்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. எனது குணஞ் செயல்களால் எனக்குப் பீடும் பெருமையும் ஏற்பட்டால் போதும். பிறர் எனக்குக் கௌரவமளிக்க வேண்டியதில்லை. நான் கௌரவமும் பிற விருதுகளும் பெறுவதானால், பிரஞ்சுக்காரர்க ளிடமிருந்து அடையவே கருதியிருக்கிறேன்'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறி னான். இவனது அஞ்சாமையையும் உயர்ந்த நோக்கத்தை யும் அறிந்து அனைவரும் பாராட்டினர்.

நெப்போலியன் பிரையன் இராணுவக் கல்லூரியில் படித்துக்கொண் டிருக்கும்போதே பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதலானான். அதுவும் பிரபுக்கள், சீமான் களின் விபரீதப் போக்கைக் கண்டித்தும், குடியரசுக் கொள் கையை ஆதரித்தும் அவன் பல கட்டுரைகள் எழுதினான்.

பிரான்ஸ் தேசத்தில் பன்னிரண்டு மாகாணங்களிலுள்ள இராணுவக் கலாசாலைகளிலிருந்து முதல்தரமாகத் தேர்ச்சி பெறும் மாணவர்களில் மூன்று பேரைப் பொறுக்கி யெடுத்து, ஆண்டுதோறும் பாரிஸ் நகரில் உள்ள உயர்தர இராணுவக் கல்லூரிக்கு அனுப்புவது ஒரு முறையாக இருந்தது. கல்வியை ஆர்வத்துடன் படித்துவந்த நெப்போ லியன் மேற்குறித்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாரிஸ் உயர்தர இராணுவக் கல்லூரிக்குச் சேர்க்கப்பட்டதில் வியப் பொன்றுமில்லை. அவன் பாரிஸுக்குப் படிக்கச் சென்ற போது பதினைந்து வயது. யுத்த மந்திரியும் பிரையன் கல்லூரி யாசிரியர்களும் நெப்போலியனது நன்னடத்தை முதலியவைகளைப் பாராட்டி, பாரிஸ் கலாசாலைத் தலைவர், ஆசிரியர்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் அனுப்பினர். யுத்த மந்திரி தமது சர்ட்டிபிகேட்டில், "நெப்போலியன் நற்குண சம்பன்னன்; சத்திய சந்தன்; நல்லொழுக்க முடையவன்;

நன்றி விசுவாச முள்ளவன்" என்று புகழ்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இவ்விதம் நெப்போலியன் கல்வியில் உயர்வடைவதை யறிந்து, லதீதா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. கார்ஸிகா கவர்னரும் மற்றவர்களும் நெப்போலியனது முன்னேற்றத்தைப் பாராட்டினர்.

பாரிஸ் நகர இராணுவக் கலாசாலையில் படிக்கும் மாணவர்களுக்குப் பிரபுகளுக் குரிய சுக சௌகரியங்களைப் போல், அதிதமான சௌகரியங்களும் வசதிகளும் கொடுக்கப்பட்டிருந்தன. மாணவர்களின் குதிரைகளைப் பராமரிக்க ஆட்கள், ஆயுதங்களைத் துடைக்க, மற்ற குற்றேவல்கள் புரிய ஆட்கள் ஏற்படுத்தப்பட் டிருந்தனர். சங்கீதம், நடனம் முதலிய களியாட்டங்கள் அடிக்கடி நடந்தன. உணவு, உடை, படுக்கை எல்லாம் உயர்தரமா யிருந்தன. இராணுவப் பயிற்சி பெறவேண்டிய மாணவர்கள் இராஜபோகத்தை யனுபவித்து வந்தார்க ளென்றே கூறவேண்டும். நம் நெப்போலியனுக்கு இவ் வேற்பாடுகள் ஒரு சிறிதும் பிடிக்கவில்லை. பெரும்பாலும் கஷ்டங்களும், பயங்கர அனுபவங்களும் நிறைந்த போர் முறைகளையும், தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும் பயிலவேண்டிய மாணவர்களை, சுக போகத்தில் ஆழ்த்திச் சோம்பேறிகளாக்குவது சிறிதும் அடாது என்று சுட்டிக் காட்டி, மாணவர்களுக்குத் தற்போது செய்யப்பட் டிருக்கும் ஏற்பாடுகளை மாற்றியமைத்து, எதிர்காலத்தில் மாணவர்களின் அனுபவங்களுக்கு ஏற்றவிதமாகத் திட்டங்களை உடனே வகுக்க வேண்டுமென்றும், குதிரைகளைப் பராமரிப்பது முதலிய எல்லா வேலைகளையும் மாணவர்களையே செய்து கொள்ளச் செய்யவேண்டு மென்றும் விவரித்து அவன் கவர்னருக்கு ஒரு மனு விடுத்தான். நெப்போலியனது போக்கும் செயலும் மற்ற மாணவர்களி னின்றும் முற்றும் வேறுபட்டதா யிருந்தது, அனைவர் கவனத்தையுங் கவர்ந்தது. அத்துடன் அவன், தனக்குப் போர்ப்பயிற்சி யளித்துவந்த போதகாசிரியர்களைக் காட்டிலும், இராணுவத் துறையில் மிகப்பழகியவன்போல், ஒவ்வொரு பயிற்சியிலும் தனது நுண்ணறிவையுங் காட்டி வந்தது பலராலும் பாராட்டப்பட்டது.

வழக்கம் போலவே, நெப்போலியன் பாரிஸ் இராணுவக் கலா சாலேயிலும் போதிக்கப்படும் எல்லா பாடங்களேயும் அக்கரையாகப் படித்து வந்தான். ஒரு தடவை, அக் கலா சாலேயில் கணக்கு ஆசிரியர், மாணவர்களுக்கு ஒரு கணக்கைக் கொடுத்துப் போடச் செய்தார். அது மிகவுங் கஷ்டமான கணக்காகும். ஆதலால் எந்த மாணவரும் அதைப் போடவில்லே. ஆனுல், நம் நெப்போலியன் அதைப் போட்டு முடிக்காது விடுவதில்லே என்று தீர்மானித்து ஏகாந்தமாயிருந்து மூன்று தினங்கள் மூளேக்கு வேலே கொடுத்து சரியான விடையைக் கண்டு பிடித்தான். இவனது விடா முயற்சியையும், கணக்கிலுள்ள நுண்ணறிவையும் ஆசிரியர் முதல் அனேவரும் புகழ்ந்தனர். அவன் போட்ட இக் கணக்கு பின்னர், 'நெப்போலியன் கணக்கு' எனப் பிரசித்தி பெற்று வழங்கியது.

இவ்விதச் செயல்களால் நெப்போலியன் பாரிஸ் நகர மக்களால் பெரிதும் நன்கு மதிக்கப்பட்டு வந்தான். இவன் பல விஷயங்களேப் பற்றியும் கட்டுரைகள் வரைந்து சிறந்த எழுத்தாளன் என்று தெரிவித்து வந்தது போலவே, விவாதஞ் செய்வதிலும் சாமர்த்தியம் பெற்றவனுய் இருந்தான். பதினூருவது வயதிலேயே இவன் கலாசாலேயைச் சேர்ந்த மேதாவிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர்களுடன் தன் நுண்ணறிவு புலப்பட வாதஞ் செய்வான். ஆனுல் அவனது வாதம் சிலருடையதைப் போல் குதர்க்க வாதமாகவும் பிடிவாதமாகவும் இல்லாது, தர்க்க ரீதியாகவும், ஆழ்ந்தும் இருக்கும். நியாய எல்லேயில் நின்று சொற்களே அளந்து அறிவு நிதானத்தை இழக்காது அவன் பேசுவான். ஆகவே, அம் மேதாவிகள் அவனுக்கு 'உன்னத வாத கேஸரி' என்ற பட்டம் அளித்துப் பாராட்டினர். இவ்விதமாக, நெப்போலியன் இராணுவ விஷயத்தில் மட்டுமல்லாது, சாஸ்திரம், சரித்திரம், இலக்கியம் முதலிய பல முக்கிய விஷயங்களிலும் நிபுணத்துவ முடையவனுயிருந்தான்.

## 3. இளமையிலேயே இராணுவப் பதவி

கடைசியாக, பாரிஸ் இராணுவக் கலாசாலை படிப்பு முடிந்து நடந்த பரிட்சையில் நெப்போலியன் கணிதம், சரித்திரம், பூகோளம் ஆகியவைகளில் முதன்மையாகத் தேர்ந்து பட்டம் பெற்றான். இதன் பயனாக, இவனுக்குப் பதினாறுவது வயதிலேயே, இரண்டாவது 'லெப்டினண்ட்' பதவி யளிக்கப் பட்டது. இவன் இவ்வளவு இளமையில் இராணுவத்தில் பொறுப்புள்ள பதவி பெற்றதைப் பற்றிப் புகழ்ந்து பேசாதவர்கள் கிடையாது.

பளுவுள்ளதும் பலவிதமானதுமான இராணுவ உடைகளையும் ஆயுதங்களையும் மிக இளைஞனான நெப்போலியன் தரித்திருந்தது ஒருவிதத்தில் விநோதமா யிருந்தாலும், மற்றொருவிதத்தில் கம்பீரமாகவே காணப்பட்டது. ஆனால், இவனைக் கண்ட பலர் கத்தரிக்காய்க்குக் கால் முளைத்ததோ என்று கூறிப் பரிகாசஞ் செய்யலாயினர். குட்டையான தோற்றமும், மெலிந்த தேகமுமுடையவனாக இருந்தாலும், அவனது ஒளி வீசுங் கண்களும், பெண்மை பொலிவும் முகமும் பொன்னிற மேனியும் இராணுவ அதிகாரிகளையும் மற்றவர்களையுங் கவர்ந்தன. மேலதிகாரிகள் உத்தரவுப்படி அவன் வாலன்ஸ் என்னுமிடத்திலுள்ள பட்டாளத்தில் போய்ச் சேர்ந்தான். அங்கு கொலம்பியா என்ற பெயருடைய காரிகையொருத்தி அவனுக்குச் சிநேகமானாள். நாளடைவில் அவள் வீட்டுக்கு அடிக்கடி போய் வந்துகொண் டிருந்ததில் பிரபுக்கள் உயர்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலருடைய நட்பை அவன் பெற்றான். அத்துடன் கொலம்பியாவின் குமாரத்திக்கும் நெப்போலியனுக்கும் நெருங்கிய தோழமை யேற்பட்டது. இவர்கள் அறிவும் குணமும் பெரும்பாலும் ஒத்திருந்ததால், அநேகமாக இணைபிரியாமலே எங்கும் உலாவுவர். பல விஷயங்களைப் பற்றியும் உரையாடி மகிழ்வர். இவர்கள் இவ்வளவு அந்நியோந்நியமாகப் பழகினாலும், இவர்களிடையே புனிதமான சகோதர நேயமே நிலவி யிருந்தது.

நெப்போலியன் சிறிது காலத்திற்கெல்லாம் வாலன்ஸ் நகரிலிருந்து லையான்ஸ் நகருக்கு மாற்றப்பட்டான். அப்

போது, அவன் அங்நங்கையைப் பிரிந்து செல்ல நேர்ந்ததற்காக மிகவுந் துக்கித்தான். அவளுக்கும் இப் பிரிவைச் சகிக்க முடியவில்லை. லையான்ஸ் நகர் வந்த சில தினங்களில் நெப்போலியன் நோய்வாய்ப்பட்டான். அவனுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் தன் போஷிப்புக்குப் போதுமானதாய் இல்லாமலிருந்ததே நோய்க்குக் காரணமாகும். இவன் ஒரு ஓட்டலில் சிறு அறையொன்றில் தனியே வருந்திக்கொண்டிருக்கையில், ஜினிவா வாசியான சீமாட்டி யொருத்தி இவனுக்குச் சைத்தியோபசாரங்கள் செய்து குணமடையச் செய்தாள்.

இதன்பின், லையான்ஸ் நகரக் கல்விக் கழகத்தார் ஒரு வியாசப் போட்டி ஏற்படுத்தினர். 'மக்கள் வாழ்க்கையின் இன்பத்திற்கான சாதனங்கள் எவை?' என்பதுபற்றி முதல் தரமான கட்டுரை எழுதுவோர்க்குத் தக்க பரிசு வழங்குவதாக விளம்பரப்படுத்தப்பட்டது. ஆகவே, இதற்குப் பலர் எழுதினர். நம் நெப்போலியனும் ஒரு கட்டுரை எழுதியனுப்பினுன். போட்டிக்கு வந்த கட்டுரைகளையெல்லாம் பரிசிலனை செய்ததில், நெப்போலியன் வியாசமே பலவகையிலுஞ் சிறந்ததாய் இருப்பதைக் கண்டு, மேற்படி கழகத்தார் அவனுக்குப் பரிசு வழங்கினர். நெப்போலியன் பிற்காலத்தில் பிரஞ்சு தேசாதிபதியாய் இருக்கையில் தாலிகாண்ட் என்ற மந்திரி யொருவர், இளமையில் பரிசுபெற்ற கட்டுரையைப் பார்த்தால் மகிழ்ச்சியுறுவான் என்று எண்ணி, அதை வரவழைத்துக் காட்டினுர். ஆனுல் நெப்போலியன், 'அனுபவமில்லாது எழுதியது; நடை முறையில் சாத்தியமற்ற விஷயங்கள் கொண்ட இது பயனற்றது' என்று கூறி அதைக் கிழித்துப் பொசுக்கினுன். இதன் பின்னரும் அவன் தேச அரசியல் நிலைமையைப்பற்றியும், சமூக நிலைமையைப் பற்றியும் பல கட்டுரைகள் எழுதிவந்தான். இதுவன்றி அவன் பிறந்த நாடான கார்ஸிகா தீவின் சரித்திரத்தை எழுதினுன். ஆனுல், இராணுவ விஷயங்களில் அதிக கவனஞ் செலுத்த நேர்ந்ததால், அச் சரித்திரத்தை அச்சிட்டுப் புத்தகமாகக் கொணர முடியவில்லை.

நெப்போலியன் லேயான்ஸ் நகரில் இருக்கையில், பிரஞ்சு அரசியல் ஆதிக்கத்தைப் பெறும் விஷயத்தில், பிரபுக் கட்சிக்கும் ஜனக்கட்சிக்கும் இடையே நடந்துகொண்டிருந்த போராட்டம் உச்சநிலையில் இருந்தது. இவ்விரு கட்சியின் போக்கைக் கவனித்துவந்த நெப்போலியன் ஜனக்கட்சியின் கிளர்ச்சியே நியாயமானதென்று கருதி, அதை ஆதரிக்கலானான். சகா இராணுவ அதிகாரிகளில் பலர் பிரபு வம்சத்தினரா யிருந்ததால், நெப்போலியனது மனோபாவத்தை யறிந்து, அவனை வெறுக்கலாயினர். ஆனால் அவன் அதை லட்சியஞ் செய்யவில்லை.

நெப்போலியன், இராணுவத்தில் பொறுப்புள்ள பதவியை வகித்து வருகையிலும், புத்தகங்களைப் படித்து வரும் பழக்கத்தை விடவில்லை. இப்போது அவன் ஒழிந்த நேரங்களில், அரசியல் சம்பந்தமான புத்தகங்களையும் இராணுவ விஷயங்களைப்பற்றியும், யுத்தஞ் செய்யும் முறை, தந்திரங்களைப்பற்றியும் விவரிக்கும் புத்தகங்களையும் ஏராளமாக வாசித்து வந்தான். அக்ஸோனி என்னுமிடத்தில் நடந்த கலகத்தை யடக்க நெப்போலியன் படையுடன் சென்றிருந்தான். அங்கு அவன் படை தங்கியிருந்த இடத்திக்குப் பக்கத்தில் அம்பட்டன் வீடொன்று இருந்தது. அவ் வீட்டுத் தலைவி தான் வைத்திருந்த கடையில் மற்ற வீரர்களெல்லாம் சுருட்டு முதலிய சாமான்களை வாங்கித் தமாஷாகப் பொழுது போக்கிக்கொண் டிருப்பதையும், நெப்போலியன் மட்டும் கூடாரத்தை விட்டு வெளிவராதிருப்பதையுக் கவனித்து, "இவன் என்ன கோஷாவா? எப்போதும் உள்ளே அடைபட்டுக் கிடக்கிறானே' எனக் கேலி செய்தாள். இதைக் கேட்டு நெப்போலியனுக்குக் கோபம் வரவில்லை. அவளது அறியாமைக்காக அவன் தனக்குள்ளாகவே நகைத்துக் கொண்டான்.

பின் நெப்போலியன் தேசாதிபதியாய் வந்த காலத்தில் ஒருமுறை அவ்வூர் வழியாகப் படையுடன் போக நேர்ந்தது. அங்கு அவ் வம்பட்டன் மனைவியை அடையாளங் கண்டு பிடித்து, "அம்மா! பத்தாண்டுகளுக்கு முன் இங்கு ஒரு பட்

டாளம் வந்ததே! நினைவிருக்கிறதா! அதில் இருந்த ஒரு உத்தியோகஸ்தனைப்பற்றி நீ கூட பரிகசிப்பாயே!" என்று கேட்டான். அவள், "ஆமாம். அவன் ஒரு பெண்ணைப்போ லிருந்தான்" என்றாள். நெப்போலியன் நகைத்து, "அம்மா! அந்தப் பிள்ளை நான்தான். அச்சமயத்தில் நான் மற்ற வீரர்களைப்போல் உன்னிடம் அரட்டை யடித்துக்கொண் டிருந்தால் இப்போது இவ்வளவு உயர்ந்த பதவியை அடைந்திருக்க முடியுமா!" என்று சொன்னான். அம்மாது ஆச்சரியத்தால் பிரமித்துப் போனாள். பின் அவள் நெப்போலியனை மகிழ்ச்சியுடன் வாழ்த்தினாள்.

ஜனக்கட்சியை ஆதரித்துவந்ததன் பயனாக, நெப்போலியன் இராணுவத்திலுள்ள மேலதிகாரிகளுடைய பகைமைக்கு ஆளாக வேண்டியதாயிற்று. அவனுக்குப் பலவிதமான இடையூறுகள் ஏற்பட்டன. அக்ஸோனி என்னுமிடத்தில் ஒரு பிரபுவின் மாளிகையில் நடந்த விருந்தின்போது, பல பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து நெப்போலியனை அவமானப்படுத்த முயன்றனர். ஆனால், அவன் தன் வாக்குவன்மையால் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தக்க பதிலளித்து தன் கொள்கையை நிலைநாட்டி வெற்றி பெற்றான். அதே ஊரில் பிறிதொருநாள் ஒரு பிரபல பாங்கரின் பங்களாவில் ஒரு விருந்து நடைபெற்றது. அதற்குப் பல துறைகளிலும் பிரசித்திபெற்ற பேரறிஞர்கள் பெரும்பாலார் விஜயஞ் செய்திருந்தனர். நம் நெப்போலியனும் ஆபீரைனல் என்னும் பிரபல தத்துவ சாஸ்திரியுடன் அவ்விருந்துக்குச் சென்றிருந்தான். அச்சமயம் மேற்படி பாங்கரின் அறிவும் அழகுமுடைய குமாரத்தியும் மற்றுஞ் சிலரும் நெப்போலியனுடன் உரையாடியபொழுது, அவன் பிரஞ்சு தேச அரசியல் நிலைமையை வெகு அழகாக எடுத்துக் கூறி, சந்துஷ்டியான நிலை ஏற்படுவதற்குரிய வழியையுந் தெரிவித்து யாவரையும் வியப்புறச் செய்தான். தேச நன்மையில் அவனுக்குள்ள நன்னோக்கத்தையும் தெளிந்த அரசியல் ஞானத்தையும் அனைவரும் பாராட்டினர். இருபதாவது வயதிலேயே இத்தகைய புகழைப் பெற்ற நெப்போலியன் இராணுவத்திலும் தன்

திறமையைக் காட்டி வந்ததன்பயனுக, 1791-ம் வருஷத்தில் முதல் லெப்டினண்ட் பதவியைப் பெற்றுன். இதன்பின், அவன் இராணுவ அமைப்பிலும், துறைமுக அமைப்பிலும் கடற்படை யமைப்பிலும் மிகுந்த சிரத்தை செலுத்திக் காரியஞ் செய்துவந்தான்.

நெப்போலியன் தன் பிறப்பிடமான கார்ஸிகாவுக்குப் போய்ச் சிலகாலம் இருந்துவந்தான். அச்சமயம் அவன் அவ்வூரில் உதித்த அறிஞர்கள், வீரர்களைப்பற்றிக் கட்டுரைகள் வரையலானுன். அங்குள்ளவர்கள் அரசியல் அறிவைப் பெறுவதற்காக ஒரு சங்கம் ஏற்படுத்தினுன். இதில் அவன் பிரஞ்சுதேச நிலைமையையும், பிரஜைகளின் உரிமை, நன்மைகளையும்பற்றி வாதத் திறமையோடு பிரசங்கஞ் செய்து, சிறந்த பிரசங்கி எனப் பெயர் பெற்றுன். அரசனைத் தங்கள் இஷ்டப்படி ஆட்டிவைத்து, கொடுங்கோலாட்சி செலுத்திவரும் பிரபுக் கட்சியைக் கண்டித்து வந்ததுபோலவே, அவன் ஜனங்கள் பெயரால் வீண்கலகஞ் செய்து விபரீத முண்டு பண்ணிவரும் ஜாகுபின் கட்சியையும் பலமாகக் கண்டித்து வரலானுன். எனவே, ஸால்ஸெட்டி என்னும் அயோக்கியனெருவன், அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்துவரும் ராஜத் துரோகிகளில் நெப்போலியனும் ஒருவன் எனச் சர்க்காரிடம் புகார் செய்தான். அரசாங்க அதிகாரிகள் நெப்போலியனை விசாரித்து உண்மையறிந்து, அவனைக் கௌரவித்து அனுப்பியதோடு, பொய்க்குற்றஞ் சாட்டிய ஸால்ஸெட்டிமீது நடவடிக்கை யெடுத்துக்கொள்ள முயன்றனர். இதையறிந்து அவன் சிலநாள் தலைமறைவாயிருந்து, கடைசியில் இத்தாலிக்கு ஓடிவிட்டான்.

நெப்போலியன் பாரிஸ் நகரிலுள்ள எல்லா புத்தக நிலையங்களுக்குஞ் சென்று ஐரோப்பா கண்டத்தின் சரித்திரம், பூகோள அமைப்பு, தேசங்களில் அரசியல் நிலைமை சம்பந்தமான நூல்களைப் படித்துவந்தான். இவன் தன் கண்ணெதிரில் நடக்கும் அக்கிரமங்களையும் கலகங்களையுங் கண்டு மனம் மிக வருந்திவந்தான். பிரபுக் கட்சியின் கொடுமைக்கும் ஜனக்கட்சியின் கலகத்துக்கும் ஒரு முடிவு காண

வேண்டுமென்று அவன் தன்னுள் தீர்மானித்துக் கொண்டான். மக்களிடையே கல்வியறிவும், சமய உணர்ச்சியும் பெரும்பாலும் இல்லாதிருந்து வருவதே, பிரான்ஸின் அலங்கோலத்துக்கும் காரணம் என அவன் அறிந்தான். ஐரோப்பாவிலுள்ள பிறதேசங்களைப்போல் பிரான்ஸையும் ஒழுங்கான நிலைமைக்குக் கொண்டுவர, தன்னாலான முயற்சியைச் செய்ய வேண்டுமென்று முடிவுசெய்து, அவ்வகையில் செயலாற்றி வந்தான். அவ்விதம் அவன் எடுத்துக்கொண்ட பகீரத முயற்சியே, பின் பிரான்ஸில் குடிதழுவிய கோலாட்சியை ஏற்படுத்தி, உலகிலேயே உன்னத தேசமென அனைவரும் புகழக்கூடிய தகுதியை யுண்டாக்கியது.

## 4. தேசத்தைப் பாதுகாக்க திக்விஜயம்

நாளுக்கு நாள் பாரிஸிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் கலகமும் குழப்பமும் அதிகமாகிச் சாதாரணமாக அடக்கமுடியாத நிலைமை அடைந்துவருவதைக் கண்ட நெப்போலியன் மனம் பதறிப்போய், இதற்கொரு முடிவு காணவிடில் நிலைமை விபரீதமாய் முற்றிப்போய் விடுமென்று உணர்ந்து, அரசாங்கத்தின் அநுமதியைப் பெறுமலே, தானே கலகஞ் செய்பவர்கள் மீது நடவடிக்கை யெடுத்துக் கொண்டு அடக்கி யொடுக்கலானுன். இவ்வகையில் தனக்கு உதவியாக அவன் ஏழைகளிலும் தொழிலாளர்களிலும் பிற பிரிவுகளிலும் உள்ள அறிஞர்களையெல்லாம் ஒன்று திரட்டி ஒரு கட்சியாக்கினுன்.

தன் தாயைக் காண நெப்போலியன் மற்றொருமுறை கார்ஸிகாவுக்குப் போனபோது, பிரிட்டிஷார் அதைக் கைப்பற்ற படையெடுத்திருப்பதையும் அவர்களது முயற்சிக்குப் பயோலி முதலியவர்கள் உடந்தையாக இருப்பதையும் கண்டான். உடனே அவன் பயோலியிடஞ் சென்று, தங்களுக்குள் எவ்வளவு விரோதமிருந்தாலும் அன்னியருக்கு விட்டுக் கொடுக்கக்கூடாது என்று கூறினுன்; ஆனல் தன் நாட்டை அடிமைப்படுத்திய பிரஞ்சுக்காரர்கள் மீது பழிதீர்த்துக் கொள்ளவேண்டு மென்ற ஆத்திரத்தோடிருந்த பயோலி

முதலியவர்கள் இவன் புத்திமதியைக் கேட்கவில்லை. எனவே, அவன், தன்னிடமுள்ள சிறுபடையைக்கொண்டு பிரிட்டிஷாரோடு போர்புரிந்து விரட்டத் துணிந்தான். நெப்போலியன் நடத்திய கன்னிப்போர் அதாவது முதற்போர் இதுதான். பிற்காலத்தில் அவன் செய்த பெரிய பெரிய போர்களுக்கெல்லாம் இதுதான் அடிகோலியது. அவன் பிரிட்டிஷாருக்கும் பயோலி கோஷ்டியாருக்கும் புத்திபுகட்ட கடும்போர் புரிந்தானுயினும், எதிரிகளின் பெரும்படையின் தாக்குதல் முன் நிற்கமாட்டாது பின்னடைய வேண்டியதாயிற்று. கடைசியில் கார்ஸிகாவைக் கைப்பற்றிக்கொண்ட எதிரிகள் நெப்போலியனது தாயையும் சகோதர சகோதரிகளையும் துன்புறுத்த முயன்றனர். அவர்கள் அவ்விதம் செய்வதற்குள் நெப்போலியன் தன் குடும்பத்தாரையும் சொத்தையும் அப்புறப்படுத்தி இரவோடிரவாய்ப் படகிலேற்றி மார்ஸலிஸ் நகரில் கொண்டு சேர்த்தான். ஆனால், அத்துடன் நெப்போலியன் சோர்ந்துபோய் உட்கார்ந்துவிடவில்லை. சிறிது காலத்திற்கெல்லாம் கார்ஸிகாவில் உள்நாட்டுக்கலகம் ஏற்படலாயிற்று. அந்நாட்டு மக்கள் ஆங்கிலேயர்களின் ஆட்சியை விரும்பாது கிளர்ச்சி செய்யலாயினர். கார்ஸிகாவின் நிலைமையைக் கவனித்துக்கொண்டே வந்த நெப்போலியன் இதுதான் தக்க சந்தர்ப்பம் என அறிந்து, மேற்படி சம்பவம் நடந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தன் படையுடன் சென்று போராடி அதைக் கைப்பற்றிக்கொண்டான். இப்போதே உண்மையுணர்ந்து புத்திபெற்ற பயோலி வெட்கமுற்று இங்கிலாந்துக்குப் போய்விட்டார். மக்கள் நெப்போலியனை நேசிக்கலாயினர்.

இவ்விதம் பிரான்ஸுக்குப் பெருமையை யுண்டு பண்ண நெப்போலியன் பெருங்கஷ்டம் எடுத்துக்கொண்டு காரியஞ்செய்தும், பிரபுக் கட்சியினர் தங்கள் துவேஷத்தை விடாது முன்னையினும் அதிகமாக விரோதங்கொண்டு அதைப் பகிரங்கமாகவே காட்டலாயினர். ஆயினும், தெய்வத்தின் துணை நெப்போலியன் பக்கமே இருந்ததால், பிரபுக் கட்சியின் பொறாமை, பகைமையெல்லாம் இவனுக்கு

நன்மையையே உண்டுபண்ணியது. அவன் தன் லட்சியத்தை எய்தவும் வாழ்க்கையில் ஏற்றம் பெறவும் அவை ஏணிப்படிகளாய் அமைந்தன.

இதனிடையே, மத்திய தரைக் கடற்கரை யோரத்தில் பிரஞ்சு தேசத்துக்குச் சொந்தமான தோலோன் என்ற சிறு நாட்டை, அதில் வசித்துவந்த பழைய அரச வம்ச சம்பந்த முடைய மக்களும், மார்ஸலிஸ், லியான்ஸ் முதலிய இடங்களிலுள்ள பிரபுக் கட்சியினரும் சேர்ந்து, கப்பல்கள், யுத்த தளவாடங்கள் முதலியவைகளோடு, பிரிட்டிஷாருக்கும் ஸ்பானிஷாருக்கும் ஒப்படைத்து அடைக்கலம் புகுந்தனர். பிரபுக் கட்சியினருடைய இத் துரோகச் செயல் பிரான்ஸிலுள்ள ஜனக்கட்சியினருக்கு மனக்கொதிப்பை யுண்டு பண்ணியது. தோலோன் பிரதேசத்தை அன்னியரிடமிருந்து விடுவிக்க வேண்டுமென்று அவர்கள் கிளர்ச்சி செய்தனர். எனவே, அரசாங்கம், கார்டௌ என்னுந் தளகர்த்தர் தலைமையில் ஒரு படையை அனுப்பியது. மூன்று மாதங்களாகியும் இச் சேனாதிபதியால் ஒன்றுஞ்செய்ய முடியாமற் போகவே, அவரை நீக்கிவிட்டு, நெப்போலியனை அப் பதவிக்கு நியமித்து அனுப்பினர். அவன் தனது அறிவுத் திறமையைக் கொண்டு, படையை வேறுவிதமாக அணி வகுத்து நிற்கச்செய்து, சிறிய ஜிப்ரால்டரின் குன்றின்மீது பீரங்கிப் படையைக் கொண்டுபோய் வைத்து எதிரிகளைத் தாக்கினான். அவன் கருதியபடியே தோலோன் நகரிலிருந்து எதிரிகளைத் துரத்தி வெற்றிகொண்டான். இவனது போர்த் திறமையை அனைவரும் பாராட்டினர். இதன்பின், அவன் தன் சுக சௌகரியங்களைக்கூடக் கவனியாது பிரான்ஸ் தேசத்தின் தற்காப்புக்கான ஏற்பாடுகளைச் செய்துவந்தான்.

தேசப் பாதுகாப்பில் இவனுக்குள்ள அக்கரையின் பயனாக, 1794–ல் இத்தாலியிலுள்ள பீரங்கிப்படைக்குச் சேனாதிபதியானான். இப்பதவியை ஏற்க இவன் அங்கு செல்கையில், நைஸ் பிரதேசத்தில் ஆஸ்திரியா, ஸர்டீனியா என்னுஞ் சிறு தேசத்தின் துணைகொண்டு, பிரஞ்சு சேனையோடு போர்புரிந்து சில இடங்களைக் கைப்பற்றிக் கொண்டிருந்தது.

எனவே, நெப்போலியன் தன் ஏற்பாடுகளைத் தெரிவித்து, அதன்படியே 15,000 சோல்ஜர்களுடன் சென்று இரு பிரிவாகப் பிரிந்து எதிரிகளைச் சூழ்ந்து கடுமையாகப் போர் செய்தான். இவனது வீரதீரமும் போர் முறைகளும் எதிரிபடைகளைத் தோற்று ஓடச்செய்தது. யுத்தம் முடிந்தபின், நெப்போலியன் மார்ஸிலஸ் நகர் ராஜீயச் சிறைச்சாலையில் வெடிமருந்து வைப்பதற்காக, அதற்கேற்ற முறையில் அதைச் சீர்திருத்தி யமைக்கலானான். இவனது உண்மைக் கருத்தை யறியாத அதிகாரிகள் தேசபக்தர்களைச் சிறைப்படுத்தவே இவ்விதம் சிறையைப் பலப்படுத்துகிறானெனக் கருதி இவனைக் கைது செய்தனர். நெப்போலியன் விஷயத்தை வெளியிட்டதும் விடுதலை செய்யப்பட்டான். ஆயினும், இவன்மீது கொண்ட சந்தேகத்தை அறவே நீக்கிக்கொள்ளாத அதிகாரிகள், இவனைக் காலாட்படைக்கு மாற்றிவிட்டனர். இது தன்னை அவமானப்படுத்துவதாகும் என்று கூறி, அவன் தன் பதவியை அக்கணமே ராஜிநாமா செய்துவிட்டு, அன்னையிருக்குமிடத்தைச் சேர்ந்தான். ஆனால் மார்ஸிலஸ் நகரில் இவனுக்குச் சரியாகப் பொழுது போகவில்லை. ஆகவே, அவன் பாரிஸ் நகருக்கு வந்து வேலை தேடலானான். சர்க்கார் தங்களைச் சேர்ந்தவர்களுக்கே சலுகை காட்டி எல்லா உத்தியோகங்களையும் அளித்துவந்ததால், நம் நெப்போலியனுக்கு ஒரு வேலையுங் கிடைக்கவில்லை. இவன் வேலை கேட்கப்போன இடங்களில் பரிகசிக்கப்பட்டான். உத்தியோகத்திலிருக்கும் போதே வறுமையால் வாடிவந்த இவனது குடும்பம் இப்போது தாங்கமுடியாத தரித்திரத்தால் தவிக்கலாயிற்று. இந்நிலையிலும் அவன் அன்னிய தேசங்களுக்குச் சென்று உத்தியோகஞ் செய்ய விரும்பவில்லை. தாய்நாட்டை விட்டு, பிறநாட்டு நலத்துக்காக இராணுவ சேவை செய்வதா என்ற எண்ணத்தாலேயே, அவன் துருக்கிக்காயினும் சென்று பார்க்கலாமா என்று இடையில் தோன்றிய எண்ணத்தையும் விட்டுவிட்டான். கடைசியாக, பெற்ற தாயின் வாடிய வதனத்தையும் உடன் பிறந்தோரின் துயரத்தையுங் காணச் சகி

யாது அவன் தற்கொலை செய்துகொள்ள முயன்றான். இச் சமயத்தில் இளம்பருவத் தோழனொருவன் எதிர்ப்பட்டு, இவனது பரிதாப நிலையை யுணர்ந்து தன்னிடமிருந்த 6000 மோகராக்களைக் கொடுத்துதவினான்.

இதனிடையே, இத்தாலியிலுள்ள பிரஞ்சுப்படைகள் தக்க தலைவனில்லாமையால், அலங்கோலமடைந்து, ஆஸ்திரியர்களால் மீண்டும் விரட்டி யடிக்கப்பட்டனர். பிடிபட்ட இடங்கள் மறுபடியும் எதிரிகள் வசமானதை யறிந்த பிறகு தான் அதிகாரிகளுக்குப் புத்திவந்தது. ஆகவே, அவர்கள் நெப்போலியனை வரவழைத்து பழையபடி பதவியளித்து, எதிரிகளை விரட்டச் செய்தனர்.

சுற்றுப்புற நிலைமை இப்படியிருக்க, பிரான்ஸினுள் கலகம் நாளுக்குநாள் அதிகரித்து வந்தது. ஒருபுறம் பிரபுக் கட்சியாலும், மற்றொருபுறம் ஜனக்கட்சியாலும் ஏற்பட்டு வந்த புரட்சியை ஒருவாறு ஒடுக்கவேண்டி, ஜனக்கட்சியிலிருந்த சில அறிஞர்கள் ஒரு திட்டத்தை வகுத்தனர்.

இது தேசமக்களின் அங்கீகாரத்தைப் பெற்றதாயினும், பிரபுக் கட்சியினரும் ஜாகுபின் கட்சியினரும் தங்களுக்கு நாட்டில் செல்வாக்கில்லாது போய்விடும் என்ற எண்ணத்தோடு, இதை எதிர்த்துக் குழப்பம் விளைத்தனர். ஜனக்கட்சியைச் சேர்ந்த மிதவாத அறிஞர்கள் சிறுபான்மையினரா யிருந்ததால் மற்றிரு கட்சியினரும் சேர்ந்து இவர்களை நசுக்கிவிட முயன்றனர். இரு திறத்தாருக்கும் ஏற்பட்டுவந்த அடிதடியில், பாரிஸ் நகரமே அமர்க்களமா யிருந்தது.

மிதவாதிகள் சார்பில் போர் புரிந்துவந்த படைத் தலைவர்களெல்லாம் மேற்குறித்த இரு கட்சிகளின் அட்டகாசத்தைச் சமாளிக்கமாட்டாது திண்டாடவே, கடைசியில் பாராஸ் என்பவர் நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் நெப்போலியனை நியமிக்கச் செய்தார். அவன் முழுப் பொறுப்பையும் தன்னிடம் ஒப்படைத்து, தன் வேலையில் குறுக்கிடாம லிருக்கவேண்டும்; தான் வெற்றி வாங்கித் தருவது மட்டும் உறுதி என்று கூறி வாக்குறுதி பெற்றுக்கொண்டே

சேனுதிபதியானுன். உடனே அவன் பாரிஸ் நகரின் வெளிப் புற வாராவதிகளை யெல்லாம் தகர்த்தெறிந்து கலகக்காரர் களுக்கு வெளியுதவி கிடைக்காதபடி முதலில் செய்து, நாலா பக்கங்களிலும் பீரங்கிப் படைகளை வைத்து மூர்த்தனியமா கத் தாக்கினுன். அப்புறங் கேட்கவேண்டுமா! கலகக்காரர் களில் கணக்கற்றவர்கள் காலனுலகு ஏகினர். மற்றவர்கள் உயிர் தப்ப ஓடினர். எஞ்சியவர்கள் நிராயுத பாணிகளாக்கப் பட்டனர். இவ்விதமாக, கலகக்காரர்களை அடக்கி வெற்றி வாங்கித் தந்த நெப்போலியனை எல்லோரும் பாராட்டினராயி னும், அவனுக்கு இதில் மகிழ்ச்சியில்லை. தன் தேசமக்களை ஒருவருக்கொருவர் போரிட்டு மாள நேர்ந்ததே என்று அவன் துக்கித்தான்.

மிதவாதிகள் திட்டப்படி, பிரான்ஸில் புதிதாக ஏற் பட்ட அரசாங்கத்தில் நெப்போலியன் பிரஞ்சு இராணுவ மனைத்துக்கும் பொறுப்புள்ள பெரிய சேனுதிபதியாக நியமிக்கப்பட்டான். இதனுல் பொருள் வருவாய் அதிகரித் தது. ஆகவே, அவன் மார்ஸில்ஸ் நகரில் வாழ்ந்துவந்த தாய்க்கு முன்னையினும் அதிகமாகச் சௌகரியஞ் செய்து கொடுத்தான். நாட்டில் வறுமையும் வேலையில்லாத் திண் டாட்டமும் அதிகரித்து மக்களை வாட்டிவந்ததால், நெப்போ லியன் தன் சம்பளத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்கு அளித்துதவி வந்தான்.

## 5. அழகிய மனைவியும் அரச பதவியும்

கலகத்துக்குப் பின் நெப்போலியனுக்கு உயர் பதவி கிடைத்ததுபோல், ஓர் ஒப்பற்ற அழகியும் காதலியாகக் கிடைத்தாள். ஆனுல் அவள் கன்னிப்பெண்ணல்லள். ஏற்கன வே, போஹார்நை பிரபு என்னு மொருவருக்கு வாழ்க்கைப் பட்டவள். இரு பிள்ளைகளுமுண்டு. கலகத்தில் இப் பிரபு இறந்ததனுல் இவள் கைம்பெண்ணுனுள். அச்சமயம் இவ ளுக்கு வயது 28 தான். இவள் ஜோஸபைன் என்ற அழ கான பெயரைப் பூண்டிருந்தாள். நெப்போலியன் சேனுதி பதியாக வந்ததும், மீண்டும் கலகம் வராதிருக்க வழிசெய்ய

வேண்டி, பிரஜைகள் யாரிடமும் எவ்வித ஆயுதங்களும் இருக்கக்கூடாது; இருப்பவைகளைப் பறிமுதல் செய்துவிட வேண்டுமென்று உத்தரவிட்டான். உத்தியோகஸ்தர்கள் அதன்படி அனைவரிடமும் ஆயுதங்களைக் கைப்பற்றினர். அவ்விதம் பறிமுதல் செய்யப்பட்டவைகளில் ஜோஸபைனிட மிருந்த ஈட்டியுமொன்று. இது காலஞ்சென்ற கணவனுடையது. அவரது ஞாபகார்த்தமாக இதை அவள் பத்திரமாக வைத்துக் காப்பாற்றிவந்தாள். அப்பேர்ப்பட்ட ஈட்டி இராணுவ உத்தியோகஸ்தர்களால் கொண்டுபோகப்பட்டது அவளுக்கு அளவிலாத் துயரத்தை யுண்டுபண்ணியது. ஆகவே, அவள் தன் குமாரன் யூஜன் என்பவனை யனுப்பி அந்த ஈட்டியை எப்படியாயினுங் கேட்டு வாங்கிவரச் சொன்னாள். சிறுவனும் தாயின் சொற்படி, நெப்போலியனை யடைந்து தன் தந்தையின் ஈட்டியைத் திருப்பித் தருமாறு விநயமாகக் கேட்டான். அவன் சிறுவன் வேண்டுகோளுக்கு இரங்கி ஈட்டியைத் திருப்பிக் கொடுத்தான். யூஜன் அதைத் தன் மார்போடணைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டான். நெப்போலியன் அச்சிறுவனின் தந்தை விசுவாசத்தையறிந்து வியந்தான். ஜோஸபைனும் தன் மகன் வாயிலாக நெப்போலியனின் பெருந்தன்மையை அறிந்து பாராட்டினாள். இச் சிறு சம்பவம் நெப்போலியனையும், ஜோஸபைனையும் வெகு சீக்கிரம் அத்யந்த நண்பர்களாக்கிவிட்டது. இந்நட்பு முதிர்ச்சி காதலாகக் கனியுஞ் சமயத்தில், பாராஸ் என்பவர் தூண்டுதலாலும் முயற்சியாலும் 6-3-1796-ம் தேதி இருவருக்கும் ஆடம்பரமின்றித் திருமணம் நடந்தது. ஜோஸபைன் நெப்போலியனைவிட வயதில் இரண்டாண்டு பெரியவளானாலும், அன்பில் இருவரும் சமமாயிருந்தனர். இவர்கள் உண்மைக் காதலுக்கு உதாரணமாய் விளங்கினர். இவர்களது விவாக சமயத்திலேயே நெப்போலியன் இத்தாலிப் படைக்கும் தலைவனாக நியமிக்கப்பட்டான்.

இப்போது அமெரிக்காவில் ஏற்பட்டதைப்போலவே, பிரான்ஸில் குடியரசு ஏற்பட்டது. இக் குடியரசின் எதிரொலி மற்றெல்லா ஐரோப்பிய தேசங்களிலுங் கேட்கலா

யிற்று. குடியரசின் சீரிய கொள்கை எங்கும் பரவியது. இதனுல் முடி மன்னர்களும் பிரபுக்களும் மற்றும் பணக்காரர்களும் முதலாளிகளும் பீதி கொண்டு, இக் குடியரசின் காற்றுகூட தங்கள் தேசங்களின்மீது படாதவாறு காக்க முயன்றனர். ஆகவே, பிரான்ஸில் ஏற்பட்டிருக்கும் குடியரசைக் கவிழ்த்துக் குட்டிச் சுவராக்க அங்குள்ள பிரபுக்களுக்கும் அரச வம்சத்துக்கும் உதவி புரிய அவர்கள் முன் வந்தனர். இவர்களது தீவிர முயற்சியினுல் பிரஞ்சுக் குடியரசு ஆட்டங் கொடுக்கத் தொடங்கியது. இந் நிலைமையையுணர்ந்து நெப்போலியன் குடியரசை நிலை நாட்டத் தன் வாழ்க்கையையே தியாகஞ் செய்ய முன் வந்தான். இவன் போதுமான உணவும் உடையும் ஊதியமும் இல்லாது வாழ்ந்து வந்த இத்தாலியப் படைகளுக்கு உற்சாக மூட்டி, முதன் முதலாக ஆஸ்திரியர் மீதும் ஸர்டீனியர்மீதும் போர் தொடுத்தான். பிரஞ்சுக் குடியரசுக்கு ஆபத்து நேராதபடி செய்யவும் அதை எளிதில் அசைக்க முடியாதவாறு நிலை நிறுத்தவுமே நெப்போலியன் பிரான்ஸைச் சுற்றியுள்ள நாடுகளோடு யுத்தம் புரிந்தான். இது வளர்ந்தே அவனை எட்டு திசையும் படை யெடுத்து வெற்றி கொள்ளச் செய்தது; தேசாதிபதியாகவுஞ் செய்தது.

எடுத்த எடுப்பிலேயே நெப்போலியன் ஆஸ்திரியாவையும் ஸர்டீனியாவையும் முறியடித்ததும், எளிதில் தகர்க்க முடியாத மண்டுவா கோட்டையை மூன்றே நாளில் தரைமட்ட மாக்கியதும் மற்றெல்லா தேச சர்க்கார்களையும் நடுநடுங்க வைத்தது. இம் முதல் வெற்றிதான் நெப்போலியனுக்கு நெடுகிலும் வெற்றிமேல் வெற்றியை யுண்டுபண்ணி வந்தது. படை வீரர்களின் பலத்தையும் யுத்தத்தையும் விட, நெப்போலியனின் மனே உறுதியும் அஞ்சாமையும், யுத்த தந்திரங்களுமே எங்கும் வாகை மாலை சூடச் செய்தது என்று சொல்ல வேண்டும். இவைகளில் எகிப்துமீது படையெடுத்து வெற்றிகொண்டது முக்கியமாகக் குறிப்பிடத் தக்கதாகும். அவன் இராணுவத்தில் சாதாரண உத்தியோகம் ஏற்றதிலிருந்து பிரஞ்சு தேசாதிபதி பத

வியை வகித்திருந்தவரை சுமார் 25-வருஷ காலம் போர்க் களத்திலேயே பொழுது போக்கவேண்டி யிருந்தது. அவன் பிரஞ்சு தேசாதிபதியாய் வந்து 15-வருஷங்கள் அரசாட்சி புரிந்தான். அப்போதும் சிம்மாசனத்தில் வீற்றிருந்தது வெகு சொற்ப காலமே. யுத்தரங்கத்திலும் பாசறையிலுந் தான் அவன் காலத்தை யெல்லாம் கழித்திருக்கிறான். பிற தேச மன்னர்கள் அவனைப் போர்புரியத் தூண்டிவிட்டு, கடைசியில் நெப்போலியன் யுத்த வெறியன் எனத் தூற்றலா யினர். குடியரசைத் தாங்கி நிற்கும் அவனைத் தொலைக்கப் பல தேச மன்னர்களுஞ் செய்த சூழ்ச்சிகளை யெல்லாம் இங்கு விவரிப்பதென்றால் மகா பாரதமாகும். ஆனால், அவன் மீது போர் தொடுத்தவர்க ளெல்லாம் இறுதியில் மூக்கறு பட்டே முக்காடிட்டுச் சென்றனர்.

நெப்போலியன் எக்காலத்திலும் போர்க்களத்தில் பின்வாங்கி வந்ததில்லை. அவனது பகைவர்கள்தான் பல முறை புறமுதுகிட்டு ஓடி யிருக்கின்றனர். யுத்த காலத்தில் நெப்போலியனுக்கு எத்தனையோ சோதனைகளும் கஷ்டங் களும் நேர்ந்திருக்கின்றன. ஆனால் அவன் நெஞ்சந் தளர்ந்ததில்லை. எந்தக் காரியத்தையும் அவன் முடியா தென்று விட்டதில்லை. அவன் சில சமயங்களில் கூறும் யுத்த தந்திரங்களையும் வகுக்குந் திட்டங்களையும் புரிந்து கொள்ள முடியாத காலத்தில், சேனாதிபதிகளும் வீரர்களும் இது முடியாது என்று சொல்வார்க ளானால், அவனுக்கு மிகுந்த கோபம் வந்துவிடும். 'மனிதனால் முடியாததென் பது இவ்வுலகில் ஒன்றுமில்லை' என்பது அவனுடைய கொள்கை. ஆதலால்தான், நெப்போலியன் அகராதியில் முடியாது என்ற வார்த்தை கிடையாது என்று சரித்திராசிரி யர்கள் கூறலானார்கள்.

நெப்போலியனது வீர பராக்கிரமத்தைக் கண்ட பிரஞ்சு மக்கள், அவனையே தேசாதிபதியாகக் கொண்டனர். 2-12-1804-ல் அவன் பிரஞ்சு தேச சக்கரவர்த்தி யென முடி சூட்டப்பட்டான். எனவே, ஜோஸபைன் பட்டமகிஷியானாள். அடுத்தபடி இத்தாலிக்கும் அவனே அரசனானான். ஜனங்கள்

நம்பிக்கை பொய்யாதபடி, அவன் நல்லாட்சியையே நடத்தி வந்தான். பிரான்ஸைச் சுற்றியுள்ள தேசமன்னர்கள் பெரும் பாலார் நெப்போலியனுக்குத் தலை வணங்கியே நேசமாக இருந்து வந்தனர். ருஷ்ய மன்னன், ஆஸ்திரிய அரசன் ஆகியவர்கள் நெப்போலியனுக்கு ஆப்த நண்பர்க ளாயினர். அவன் படை யெடுத்துப் பிடித்த நாடுகளிலெல்லாம் குடியரசையே ஸ்தாபித்து வந்தான். பிரபு வம்சத்தினரின் அட்டகாசம் அதிகமா யிருக்கு மிடங்களில்தான், இவனுக்குப் பிரதிநிதியாகச் சிலரை நியமித்து ஆளச் செய்தான். தனது சகோதரர்களையும், ஜோஸபைன் குமாரன் யூஜீனையும் ஸ்பெயின் முதலிய தேசங்களுக்குத் தலைவர்களாக்கி வைத்தான். அவர்களும் அவனது நோக்கப்படியே குடிதழுவிக் கோலோச்சி வந்தனர்.

நெப்போலியன் தேசாதிபதியாய் வந்ததும், தனக்கு இளமையிலும் பின்னரும் பலவகையிலும் உதவி புரிந்தவர்களுக்கெல்லாம் தக்கபடி சன்மானஞ் செய்து கௌரவித்தான். தாய்மார்கள் பிள்ளைகளை நன் முறையில் வளர்த்தால் தான் ஒரு தேசம் முன்னேற்றமடைய முடியும் என்று தன் வாழ்க்கை யனுபவத்தைக் கொண்டு அறிந்த அவன் பெண் கல்விக்குப் பிரதானத்துவங் கொடுத்தான். தேசத்துக்கும் மக்களுக்கும் வேண்டிய பல முக்கிய நன்மைகளை முறையே செய்தான். அவன் இன்னும் எவ்வளவோ நல்ல காரியங்களைச் சாஸ்வதமாகச் செய்து பிரான்ஸுக்கு மட்டுமல்லாது உலகுக்கே விமோசன மேற்படச் செய்திருப்பான். ஆனால், சுய நலக் கும்பலான பிரபு வம்சத்தினர் அவனை அமைதியாகக் காரியத்தை நடத்திவர விடாது, ஆங்காங்கே கலகத்தையும் போரையும் விளைத்து வந்தனர்.

யுத்தங்களில் லட்சக் கணக்கான மக்கள் அநியாயமாக மடிவதையும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தேசங்களும் மக்களும் யுத்தம் முடிந்த பின்னரும் பலவித கஷ்டங்களையும் அனுபவித்து வருவதையுங் கண்ட நெப்போலியன், யுத்தத்தையே அடியோடு வெறுத்தான். அவன் ஆதியிலிருந்தே யுத்தத்தை மனமாற வேண்டியதில்லை. அவசியத்தை யொட்டி,

தேச நன்மையையும் பெரும்பாலான மக்கள் நன்மையை யும் ஒட்டியே அவன் போர் புரியலானான். நாளடைவில், அதையும் இல்லாதபடி செய்ய விரும்பினான். அவன் சமா தானத்தையே விரும்பி நின்றான். ஆனால், அவனது எதிரி கள் அவனைச் சமாதானமாக இருக்க விடவில்லை. என் செய் வான், பாவம்!

ஐரோப்பாவில் ஐக்கியத்தை யுண்டு பண்ணவும், எப் போதும் யுத்தமே ஏற்படாதபடி செய்யவும் நெப்போலியன் எது செய்யவும், தன் கௌரவத்துக்குப் பங்கமில்லாத வழி யில் எந் நிபந்தனைக் குட்படவும் தயாரா யிருந்தான். ஆனால், பிற தேசத்தார்தான் அதற்குத் தயாராயில்லை. எந்த தேச மன்னரோடேனும் உறவு ஏற்படுத்திக் கொண்டாலாயினும், ஐரோப்பாவில் சமாதானத்தை நிலை நிறுத்த முடியாதா என்று கருதித் தன் ஆருயிர்க் காதலி யைக் கூடத் தியாகஞ் செய்து, வேறு அரச குமாரியைக் கலி யாணஞ் செய்துகொள்ள அவன் முன் வந்தான். ஒரு சில மன்னர்களும் நெப்போலியனைத் தங்கள் மருமகனாகக் கொண்டு பெருமை பெற விரும்பினர். ஆனால், இவ்வித முயற்சிகள் வெற்றி பெறாதவாறு பிரிட்டன் இடையூறு விளைத்துவந்தது.

ஆனால், கடைசியாகத் தன்னை எதிர்க்க வந்த ஆஸ்திரி யாமீது படை யெடுத்து, கடும்போராடிக் கைப்பற்றியபோது அரசன் முதல் அதிகாரிகள் அனைவரும் ஓட்டம் பிடித்தனர். அரச குமாரி மேரியா லூயிஸா மட்டும் எப்படியோ தனித்து நின்று விட்டாள். வீரர்கள் துன்புறுத்துவதற்குமுன் நெப் போலியன் அவளைக் காப்பாற்றித் தன்னுடன் அழைத்து வந்தான். சமாதானத்தை நிலை நிறுத்தவும் தனக்குப் பின் அரசையாள ஒரு மகன் வேண்டு மென்பதற் காகவும் அப் பெண்மணியை விவாகஞ் செய்து கொள்வ தென்று தீர்மானித்தான். ஆனால், ஜோஸபைனை எப்படி பிரிந்திருப்பது என்று அவன் தயங்கினான். இருவரும் ஒரு வரை யொருவர் பிரிந்திருக்க மிகவும் வருந்தினர். இப்பிரிவுச் செய்தியைக்கேட்டதுமே, ஜோஸபைன் மூர்ச்சையுற்றாள்.

எதற்கும் கலங்கா நெப்போலியனும் காதலியின் துயரைக் கண்டு கண்கலங்கினுன். முடிவில், நெப்போலிய னின் உயர்ந்த நோக்கத்தை யுணர்ந்த ஜோஸபைன் துய ரத்தை யடக்கிக் கொண்டு, தன் காதலன் நியமித்த இடத் துக்குப் போய்விட்டாள்.

பின் நெப்போலியனுக்கும், மேரியா லூயிஸாவுக்கும் 11-11-1810-ல் விவாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பிரஜைகள் மகிழ்ச்சி கொண்டாடினர். எல்லோரும் எதிர் பார்த்தபடி, இவர்களுக்கு ஒரு புதல்வனும் பிறந்தான். இவ் வளவும் ஆனபிறகும் ஆஸ்திரிய மன்னன் மனம் மாறவில்லை. தன் அருமைமகளது நலத்தைக்கூடப் பாராது, நெப்போலிய னுக்கு எதிராக நடந்த சதிக்குடந்தையாக இருந்தான்.

நெப்போலியனின் துரதிர்ஷ்டமோ அல்லது பிரிட்ட னின் விடாமுயற்சியோ என்னவோ, அவனுக்கு எதிரான உணர்ச்சி வரவர வலுத்து வரலாயிற்று. அவனுக்கு அத்யந்த மாயிருந்த அரசர்கள்—ருஷியமன்னன் உட்பட—அனைவரும் பரம வைரிகளாயினர். எல்லா தேசத்தினரும் ஒன்று சேர்ந்து நெப்போலியனைத் தாக்குவது-பிரான்ஸ்மீது படையெடுப்பது —என்று தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

பிரான்ஸுக்கும் தனக்கும் வந்திருக்கும் ஆபத்தை யுணர்ந்த நெப்போலியன் எதிரிகள் தன்னுட்டை வளைந்து கொள்வதற்கு முன், தான் தன் படைகளுடன் சென்று அவர் களைத் தாக்கி விரட்டியடிக்க வேண்டுமென்று தீர்மானித்துப் புறப்பட்டான். இதுவரை நெப்போலியன் கூறியபடி நடந்து வந்த படைத்தலைவர்களில் பலர், இப்போது அவன் வகுத் துள்ள போர்முறைகளையும் திட்டங்களையும் எதிர்க்கலாயி னர். இதுவரை எவ்வளவோ எதிர்ப்பு, இடுக்கண் நேர்ந்த போதும் மனஉறுதி தளராத நெப்போலியன் தனது சேனுதி பதிகள் தடுத்துப் பேசத்தொடங்கிவிட்டதைக் கண்டதும் திகைத்துவிட்டான். சில சேனுதிபதிகள் தத்தம் படை களுடன் எதிரிகள் பக்கம் போய்ச்சேர்ந்து விட்டனர். இதெல் லாம் அபசகுனத்துக்கான அறிகுறிகள் என உணர்ந்த அவன் இந் நிலைமையை எவ்விதஞ் சமாளிப்பது என்று வெகுவாக

யோசித்தான். தான் போரில் உயிர் விடுவதைப்பற்றி அவன் சிறிதும் சிந்திக்கவில்லை. தனது அருமை தேசம் எதிரிகள் வசப்பட்டுப் பாழாய்ப் போகப்படாதே என்றே அவன் கவலைப்பட்டான். ஆகவே, அவ்ன் போர்முனையி லிருந்து கொண்டே, பாரிஸைக் காப்பதற்குத் தன் கௌரவத்துக்குப் பங்க மேற்படாத வகையில், சமாதானஞ் செய்து கொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துத் தூதனுப்பினன். ஆனால் எதிரிகள் சிறிதும் விட்டுக் கொடுக்க விரும்ப வில்லை. நெப்போலியன் பிரான்ஸை விட்டே போய்விட வேண்டு மென்று நிர்ப்பந்தித்தனர். ஏற்கனவே, தன் மனைவியையும் மகனையும் குடும்பத்தையும் பாரிஸை விட்டு வேறு இடத்துக் குப் போய்விடுமாறு அவன் உத்தரவிட்டிருந்தான்; ஆதலால், அவர்கள் பாரிஸை விட்டு வெகுதூரஞ் சென்றிருந்தனர்.

நெப்போலியன் கடைசியாக யோசித்தான். தன் மானத் தைக் காக்க, கடைசிவரை எதிரிகளோடு போராடுவதா? அல்லது எதிரிகள் கூறுகிறபடி நாட்டைவிட்டுப் போய் விடுவதா? அச்சமயத்திலும் அவனுக்காக உயிர் கொடுக்கக் கூடிய வீராதி வீரர்கள் அவன் வசமிருந்தனர். ஆதலால், கடைசிவரை ஒரு கை பார்த்து எதிரிகளைப் படாதபாடு படுத்தியிருக்கலாம். ஆனால், அவன் அவ்விதந் தீர்மானிக்க வில்லை. தன் தாய் நாட்டு நன்மைக்காக—தான் நாட்டை யும் சுற்றத்தாரையும் விட்டுப் போய் விட முடிவு செய்தான்.

அம் முடிவுப்படி, நெப்போலியன் தன் பரிவாரங்களு டன் எல்பா தீவுக்குச் சென்றான். அங்கு சில ஆண்டுகள் இருந்து வந்தான். எதிரிகள் தெரிவித்திருந்தபடி அவனுக் குப் பணமும் அனுப்பவில்லை; சுகசௌகரியங்களும் செய்து தரவில்லை. தன் தாயையும் மனைவியையும் மகனையும் பார்க்கவேண்டுமென்று பலமுறை தெரிவித்தும் எதிரிகள் அவர்களை அனுப்பவில்லை. இதனால் ஆக்ரோஷங் கொண்ட நெப்போலியன் எல்பா தீவிலிருந்து தனக்கு வேண்டிய படை களைத் திரட்டிக் கொண்டு, சாமர்த்தியமாகப் பிரான்ஸை யடைந்து எதிரி படைகளோடு தீவிரப் போர் நடத்தி, அவர்களை விரட்டியடித்து மீண்டும் சிங்காதன மேறினன்.

இச்சமயம் இவன் செய்த யுத்தம் வாடர்லு யுத்தம் என்று சரித்திரத்தில் பிரசித்தி பெற்றது.

ஆனால், நெப்போலியன் ஆட்சி நீடித்து நிற்கவில்லை. எதிரிகள் எல்லாம் மீண்டும் ஒன்று திரண்டு போர்புரிய முனைந்தனர். எவ்வளவோ வீரதீரத்தோடு போர் புரிவதாயினும், நெப்போலியன் சிறுபடையை வைத்துக்கொண்டு நாலா பக்கமும் சூழ்ந்துள்ள ஒரு பெரிய சேனசமுத்திரத்தை எப்படி எதிர்க்கமுடியும்? மேலும் துரோகமும் வஞ்சகமும் சேர்ந்து அவனைச் சதிசெய்கிறது. இந் நிலையில், நெப்போலியன் மீண்டும் பிரான்ஸைவிட்டுப் போய்விடத் தீர்மானித்தான். இதற்குள் எதிரிகள் அவனை உஷ்ணமிக்க ஸெயிண்ட் ஹெலினு தீவில் கொண்டுபோய்ச் சிறைவைக்க சூழ்ச்சி செய்தனர். முதலில் அமெரிக்கா சென்று காலங் கழிக்க விரும்பிய நெப்போலியன், பிரிட்டனின் பெருந்தன்மையில் நம்பிக்கை வைத்து இங்கிலாந்துக்குச் செல்லும் நோக்கத்தோடு கப்பலேறினன். ஆனால், எதிரிகள்—முக்கியமாகப் பிரிட்டிஷ் சேனதிபதிகள்—அவனை வஞ்சகமாகக் கப்பலிலேயே சிறைப்படுத்தி, ஸெயிண்ட் ஹெலினு தீவுக்குக் கொண்டுபோய்ச் சிறை வைத்தனர்.

தன் காதலனுக்கு நேர்ந்த கதியை நினைந்தே ஜோஸபைன் நோய் வாய்ப்பட்டு மரணமடைந்தாள். ஸெயிண்ட் ஹெலினு தீவில் ஆறு ஆண்டுகள் கழித்து, கடைசியாக 5—5—1821-ந் தேதியன்று இரவு நெப்போலியன் வீர சுவர்க்கம் புகுந்தான். அவனது அருமந்த மைந்தன் மூன்றுவது நெப்போலியன் எதிர்பார்த்தபடி அரசபதவியைப் பெருமலே க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டு மாண்டான்.

நெப்போலியனைப் போன்ற ஒரு புருஷோத்தமன்—மகாவீரன் பிரான்ஸில்—ஏன்? உலகிலேயே—இதற்கு முன்னும் பிறந்ததில்லை; இனியும் பிறக்கப் போவதில்லை. அவன் இவ்வுலகைவிட்டு மறைந்து இரண்டு நூற்றுண்டுகள் ஆகியும் இன்னும் அவன் பெயரும் புகழும் பசுமையாகவே இருந்து வருகிறது. உலகம் உள்ளவும் நெப்போலியன் நாமம் நீடூழி நிலவியிருக்கும் என்பதில் ஐயமுண்டோ!

The Guardian Press, Ltd., 40, Broadway, Madras.—(319410)

RAMULU PAMPHLETS ON

# Ancient and Modern Magnates

Are you ahead of the times and have an intimate knowledge of the tremendous men who shaped the destinies of the world? Well, may we introduce you to them through our series of sketches of great Prophets, Philosopers, Dictators, National **Leaders**, Scientists etc? These sketches have been written in **simple**, chaste and idiomatic English, and provide interesting and instructive reading. We have secured the services of brilliant authors and have **deliberately priced** these books at ONE ANNA each so that they may be within the easy reach of one and all.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | *Mahatma Gandhi—*A Life Sketch in English* | | 0 | 1 | 0 |
| 2. | *Gopal Krishna Gokhale | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 3. | *Rajaram Mohan Roy | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 4. | *Rabindranath Tagore | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 5. | *Subhas Chandra Bose | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 6. | *Pandit Jawaharlal Nehru | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 7. | *Janab Mohamed Ali Jinnah | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 8. | *Sri Aurobindo Ghose | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 9. | *Sri Ramana Maharshi | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 10. | *Sri Ramakrishna | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 11. | *Swami Vivekananda | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 12. | *Swami Rama Tirtha | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 13. | *Sri Sarada Devi | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 14. | *Dr. Annie Besant | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 15. | *Sarojini Devi | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 16. | *Napoleon Bonaparte | ,, ,, ... | 0 | 1 | 0 |
| 17. | *Kemal Pasha (*Dictator of Turkey*) | ,, ... | 0 | 1 | 0 |
| 18. | *Joseph Stalin (*Dictator of Russia*) | ,, ... | 0 | 1 | 0 |
| 19. | *Eamon De Valera (*President of Ireland*) | ... | 0 | 1 | 0 |
| 20. | *Franklin D. Roosevelt (*President of America*) | | 0 | 1 | 0 |
| 21. | *Winston S. Churchill (*Premier of England*) | | 0 | 1 | 0 |
| 22. | †*Adolf Hitler (*Dictator of Germany*) | ,, ... | 0 | 1 | 0 |
| 23. | †*Benito Mussolini (*Dictator of Italy*) | ,, ... | 0 | 1 | 0 |
| 24. | *Bhagavath Geetha...—*In English Prose*— | | 0 | 1 | 0 |
| 25. | "Periyar" E.V.R.—*A Life Sketch in Tamil*—. | | 0 | 1 | 0 |

** TAMIL AND † TELUGU EDITIONS ALSO AVAILABLE*

**M. S. RAMULU & CO., ESPLANADE, MADRAS**

*Copies Also At:* P. T. BELL & CO., G. T., MADRAS

# RAMULU'S NEW MODEL

# SPECIALS

We have brought this **Ramulu's New Model Specials** with the help of able and experienced authors for the especial benefit of students. A set of these books in the hands of a student is sure to be of great help and an indispensable treasure chest, helping him to avoid hit and miss methods in his school works. Our single aim in bringing out these **Ramulu's New Model Specials** is to make students successfully fit for the otherwise hard task of prosecuting their studies. We have **deliberately priced** these books at ONE ANNA each so as to enable one and all to be in possession of them.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Ramulu's Letter-writer *(101 Letters; 64 p.)* | 0 | 1 | 0 |
| 2. | Ramulu's Select Essays *(60 Essays; 64 p.)* | 0 | 1 | 0 |
| 3. | Ramulu's English Dictionary—*64 pages*— | 0 | 1 | 0 |
| 4. | Ramulu's English—Tamil Dictionary ... | 0 | 1 | 0 |
| 5. | Ramulu's English—Telugu Dictionary ... | 0 | 1 | 0 |
| 6. | Ramulu's Tamil-Tamil-Eng. Dictionary ... | 0 | 1 | 0 |
| 7. | Ramulu's Encyclopedia for Students ... | 0 | 1 | 0 |
| 8. | Ramulu's Ready-Made Speeches (50) ... | 0 | 1 | 0 |
| 9. | Ramulu's Dialogues And Debates (50) ... | 0 | 1 | 0 |
| 10. | Ramulu's 2001 Idioms And Phrases ... | 0 | 1 | 0 |
| 11. | Ramulu's 2001 English-Tamil Phrases ... | 0 | 1 | 0 |
| 12. | Ramulu's 1001 Select English Proverbs ... | 0 | 1 | 0 |
| 13. | Ramulu's 1001 Select Telugu Proverbs ... | 0 | 1 | 0 |
| 14. | Ramulu's 1001 Select Tamil. Proverbs ... | 0 | 1 | 0 |
| 15. | Ramulu's 501 Parallel Tamil-Eng. Proverbs | 0 | 1 | 0 |
| 16. | Ramulu's 501 Parallel Telugu-Eng. Proverbs | 0 | 1 | 0 |
| 17. | Ramulu's 501 Riddles And Puzzles ... | 0 | 1 | 0 |
| 18. | Ramulu's 501 New Laughing-Gas Tit-Bits. | 0 | 1 | 0 |

Copies will be sent on receipt of **Indian** Postage stamps or by M. O., of the value *plus* nine pies for Postage for **each copy**. Books will not be sent by V. P. P.

**M. S. RAMULU & CO**

**286, Appah Buildings :: Esplanade, Madras**

***Copies Also At:*** **P. T. BELL & CO., G. T., MADRAS**